# 1. பூர்வீகம்

சிங்கள மன்னர்கள் ஒல்லாந்தரை எதிர்த்துப் போராடிய வேளையில் அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்கனவே இருந்த அரேபிய சோனகக் குடியிருப்புக்களில் குடியேறினர். இப்பிரதேசங்கள் தொலமி தேசப்படத்தில் வத்திக்கான் கைப்பிரதியில் 'அராபித்தா சிவித்த' என விபரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட கலவரத்தின் பின்னர் வெல்லஸ்ஸப் பகுதிகளிலிருந்து வந்த சில முஸ்லிம்களும் கல்முனை முஸ்லிம் பகுதியில் குடியேறினர். வட-கிழக்கு மாகாணங்களில் எமது பாரம்பரிய தாயகப் பூமிக்கான சகல உரிமையும் முஸ்லிம்களுக்கு உண்டு. வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு மட்டும் உரித்தான தனிப்பிரதேசம் என்னும் கோட்பாட்டை இங்குள்ள முஸ்லிம்கள் ஒருக்காலும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

ஒல்லாந்தர் முஸ்லிம்களின் சமய வழிபாட்டு உரிமையைக்கூட மறுத்தனர். 1505 இல் போர்த்துக்கேயரின் வருகை தொட்டு, 1795இல் ஒல்லாந்தர் நாட்டைவிட்டு நீங்கும் வரை, சுமார் முன்னூறாண்டு காலம் கரையோர மாகாண முஸ்லிம்களை ஆக்கிரமிப்பாளர் சொல்லொணாத் துயர்களுக்குள்ளாக்கினர்.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கான டொமினியன் அந்தஸ்துச் சட்டமூலத்துக்கு 75 வீதமான பெரும்பான்மை ஆதரவைப் பிரித்தானியர் அன்று வற்புறுத்தினர். இது சிங்களவரோடு சிறுபான்மையினங்கள் சேர்ந்து ஆதரவு வழங்கினாலொழிய நிறைவேற்ற முடியாத ஒரு விடயமாகவிருந்தது. வேறு சிறுபான்மையினங்களைப் போலன்றி முஸ்லிம்கள் இலங்கை சுதந்திரமடைவதைப் பெரிதும் விரும்பி, தமக்குத் தேவையான பாதுகாப்புக்களை பெரிதுபடுத்தாமலும், மிகவும் இக்கட்டான ஒரு சந்தர்ப்பத்தில் முட்டுக்கட்டையாக நிற்க விரும்பாமலும் சிங்கள மக்களோடு ஐக்கியப்பட்டு ஒத்துழைத்தனர்.

இலங்கை அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகளில் கடந்த ஐம்பது அல்லது அறுபது ஆண்டு காலத்தில் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் அபிலாஷைகளுக்கெதிராகக் குரலெழுப்பிய எந்தவொரு முஸ்லிமைக்கூடக் காண்பது அரிதாகும். இது வரை முஸ்லிம் பிரதிநிதிகள் சர்வதேச சமூகத்துக்கு குற்றச் சாட்டுக்களை முன்வைத்துச் சிங்கள மக்களின் பெயருக்கு இழுக்குத் தேடவுமில்லை.

ஆனால் அரச அதிகாரத்தின்கீழ் வரும் கல்வி, காணி ஒதுக்கீடு மற்றும் குடியேற்றம் போன்ற துறைகளில் படுமோசமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ள ஒரு ஜனசமூகம் இருக்குமெனில் அது இலங்கை முஸ்லிம் சமூகமாகவே இருக்கிறது.

இன்றைய இலங்கை முஸ்லிம் ஜனசமூகத்தில் பல்வேறு கலாச்சாரக் குழுக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் பெரும்பான்மையினர் அரேபியர்களின் வழித்தோன்றல்களான இலங்கைச் சோனகர் ஆவர். 1640க்குப் பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் இந்தோனேசியாவிலும் மலேசியாவிலும் இருந்து இங்கு வந்த மலாயர்கள் இரண்டாவது குழுவைச் சேருவர். பின்னர், பிரித்தானியர் காலகட்டத்தில், 1796க்குப் பின் இந்திய உப-கண்டத்திலிருந்து, பெருமளவில் மலபார் மற்றும் குரொமென்டால் கரையோரங்களிலிருந்து மேலும் முஸ்லிம் வர்த்தகர்கள் வந்தனர். சமீப காலங்களில், இந்தியாவிலிருந்து மேமன்கள், போராக்கள் மற்றும் ஏனையோர் இங்குவந்து குடியேறி இலங்கை முஸ்லிம் ஜன சமூகத்தில் ஒரு பகுதியாகியுள்ளனர்.

1981ஆம் ஆண்டு குடிசன மதிப்புப் புள்ளிவிபரங்களின் பிரகாரம் இலங்கைக் குடிசனத் தொகையில் 10,985,666 சிங்களவரும், 1,871,535 இலங்கைத் தமிழரும், 1,056,972 இலங்கைச் சோனகரும், 825,235 இந்தியத் தமிழரும், 43,378 மலாயர்களும், 38,239 பறங்கியரும், 28,981 ஏனையோரும் இருந்தனர். முழுத்தொகை 14,850,001 ஆகும். 1,134,556 பேர் கொண்ட மொத்த முஸ்லிம் ஜனத் தொகையில் சுமார் 762,551 பேர் சிங்களமொழி

பேசப்படும் பிரதேசங்களிலும் எஞ்சிய 372,005 பேர் தமிழ்மொழி பேசப்படும் வட-கிழக்கு மாகாணங்களிலும் வாழ்கின்றனர்.

1991இன் குடிசனத்தொகை 17,247,000 என அனுமானிக்கப்பட்டது. இலங்கை முஸ்லிம்களின் ஜனத்தொகை 7.6%மாக 1,311,000 பேர் இருந்தனர். சிங்கள மொழி பேசப்படும் பிரதேசங்களில் 874,000 பேரும் எஞ்சிய 434,000 முஸ்லிம்கள் தமிழ்மொழி பேசப்படும் வட-கிழக்கு மாகாணங்களிலும் வாழ்ந்தனர். கிழக்கு மாகாணத்தில் மட்டும் 315,201க்கும் கூடுதலான முஸ்லிம்கள் தமது பாரம்பரிய வசிப்பிடங்களில் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

## 2. இலங்கையின் நிர்வாகப் பிரிவுகள்

1833ஆம் ஆண்டின் கோல்புறூக் சீர்திருத்தங்கள் இலங்கையின் நிர்வாக வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையைக் குறித்தன. இச்சீர்திருத்தங்களின் மூலம் நாட்டில் ஓர் ஒன்றிணைந்த ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டதோடு, பல்வேறு வரி வசூலிப்புப் பிரதேசங்களும், இறைவரி முகவர் நிலையங்களும் ஐந்து மாகாணங்களாகத் திரட்டி வலுப்படுத்தப்பட்டன. 1833 ஒக்டோபர் முதலாந் திகதியில் அறிக்கைகளின் பிரகாரம் பின்வரும் மாகாணங்கள் ஏற்படுத்தப்பட்டன.

1. வட மாகாணம் - யாழ்ப்பாண மாவட்டம், மன்னார், வன்னி, நுவர கலாவியவின் திசாவன்னி மற்றும் நெடுந்தீவு.
2. கிழக்கு மாகாணம் - திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களும் தம்மன்கடுவ மற்றும் பிந்தன்ன பிரதேசங்களும்.
3. தென் மாகாணம் - காலி, தங்காலை, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களும், சப்ரகமுவாவின் திசாவன்னிய, கீழ் ஊவா மற்றும் வெல்லஸ்ஸ பிரதேசங்களும்.
4. மேல் மாகாணம் - சிலாபம், புத்தளம் மாவட்டம், ஏழு கோறளைகளின் திசாவன்னி, நான்கு கோறளைகள், துன்கோறளை மற்றும் கீழ் புலத்கம பிரதேசங்கள்.

5. மத்திய மாகாணம் - கண்டி, யட்டிநுவர, உடுநுவர, ஹரிஸ்பத்து, துன்பனை, தும்பர, ஹேவாஹெட்ட, கொத்மலை, மேல்புலத்கம, வியலுவ மாவட்டங்களும், ஊவாவின் திசாவன்னி, மாத்தளை மற்றும் உடபலாத்த.

ஆயினும், 1845இல் ஆறாவது மாகாணமாகப் புத்தளத்தைத் தலைநகராகக் கொண்டு வட - மேல் மாகாணம் எனப் பிரகடனஞ் செய்யப்பட்டது. புதிய மாகாணம் மேல் மாகாணத்திலிருந்து உருவாக்கப்பட்டதோடு, சிலாபம், புத்தளம் மாவட்டங்களையும், ஏழு கோறளைகளின் திசாவன்னியையும் உள்ளடக்கியிருந்தது. தென் மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டம் மேல் மாகாணத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1873இல் வட-மத்திய மாகாணம் என அழைக்கப்படும் ஏழாவது மாகாணம் உருவாக்கப்பட்டது. அது வடமாகாணத்தின் நுவரகலாவிய மாவட்டம், கிழக்கு மாகாணத்தின் தமன்கடுவ என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. இவ்வேளையில் தெமளஹறப்பத்து வட-மேல் மாகாணத்துக்குத் திருப்பியளிக்கப்பட்டது.

1886இல் எட்டாவது மாகாணமாகிய ஊவா, மத்திய மாகாணத்திலிருந்து பதுளை மாவட்டத்தைப் பிரிப்பதன் மூலம், பிரகடனப்படுத்தப்பட்டுத் தாபிக்கப்பட்டது.

1889இல் மேற்கு மாகாணத்திலிருந்து கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களைத் துண்டாடியதன் மூலம் ஒன்பதாவது சப்ரகமுவ மாகாணம் உருவாக்கப்பட்டது.

ஒவ்வொரு மாகாணமும் ஓர் அரசாங்க அதிபரின் பொறுப்பில் விடப்பட்டது. அரசாங்க அதிபர், கலெக்டர்களின் அல்லது கரையோர மாகாண அரசாங்க முகவர்களின் மற்றும் கண்டி மாகாணங்களின் ஆணைக்குழுச் சபை இறைவரி ஆணையாளர்களின்

வழித்தோன்றலாக இருந்தார். 1955 வரை மாகாண நிர்வாக முறைமை தொடர்ந்தது.

**பின்வரும் அட்டவணை 1901இல் ஒன்பது மாகாணங்களின் அந்தஸ்தை விபரித்தது:**

| | மாகாணம் | தலைநகர் | சதுர மைல்கள் |
|---|---|---|---|
| 1. | மேல் மாகாணம் | கொழும்பு | 1,432 |
| 2. | மத்திய மாகாணம் | கண்டி | 2,300 |
| 3. | தென் மாகாணம் | காலி | 2,146 |
| 4. | வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 3,363 |
| 5. | கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 4,039 |
| 6. | வடமேல் மாகாணம் | குருநாகல் | 2,996 |
| 7. | வட மத்திய மாகாணம் | அனுராதபுரம் | 4,002 |
| 8. | ஊவா மாகாணம் | பதுளை | 3,154 |
| 9. | சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 1,901 |

1955ஆம் ஆண்டில் 22ஆம் இலக்க நிர்வாக மாவட்டச்சட்டம் ஆக்கப்பட்டதோடு, பின்வரும் இருபது நிர்வாக மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டமும் ஓர் அரசாங்க அதிபரின் பொறுப்பில் விடப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு | காலி | வவுனியா | அனுராதபுரம் |
| களுத்துறை | மாத்றை | மட்டக்களப்பு | பொலன்னறுவை |
| கண்டி | அம்பாந்தோட்டை | திருகோணமலை | பதுளை |
| மாத்தளை | யாழ்ப்பாணம் | குருநாகல் | இரத்தினபுரி |
| நுவரெலியா | மன்னார் | புத்தனம் | கேகாலை |

கடந்த சில தசாப்த காலங்களாக மொனராகலை (1959), அம்பாரை (1961), கம்பஹா (1978), முல்லைத்தீவு (1976) மற்றும் கிளிநொச்சி (1948) மாவட்டங்களில் இயைபுள்ள மாவட்ட எல்லைகளை மீள்வரைவு செய்வதன் மூலம், மேலதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் நேரடியான உள்ளூர் நிர்வாகத்துக்கென 241 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் இலங்கையில் 138 இறைவரி உத்தியோகத்தர் பிரிவுகள் இருந்தன. 1981இல் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் உருவாகுவதற்கு முன்னர் 7,316 அங்கத்தவர்களைக் கொண்ட 549 கிராம சபைகளும், 528 அங்கத்தவர்களைக் கொண்ட 33 பட்டின சபைகளும் இருந்தன.

சர்வகட்சி மாநாட்டுக்கு 1984 பெப்ரவரி 20ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரேரணைகளில், தேவையான தத்துவங்களும் கருமங்களும் வழங்கப்பட்ட 200-250 வரையிலான பிரதேச சபைகள் இருக்குமென்று கூறப்பட்டுள்ளது. ஜனத்தொகை, அளவுப்பரிமாணம், மூலவளங்கள் என்பவற்றைக் கவனத்திலெடுத்து அதிகார விடயப் பரப்புகளைக் கவனமாக மீள்வரைவு செய்வதன் மூலம் பொருளாதார நிலைத்துவமையும், ஸ்திரத்தன்மையும் உறுதி செய்யப்படும். சபைத் தலைவரும், அங்கத்தினர்களும் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுவர். 1986 ஜூன் 25ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதியவர்கள் ஏதாவதொரு ஜன சமூகத்தின் பீதியுணர்வைப் போக்கும் வகையிலும், உள்ளூர் சுயாட்சி விவகாரங்களில் இனத்துவக் குழுக்களுக்கு மேலும் கூடுதலான பங்கினை வழங்கும் வகையிலும், உ.அ.அ. பிரிவுகளில் ஜனசமூகத் திசைமார்க்கம் கொண்ட பிரதேச சபைகளை ஏற்படுத்துவது குறித்து ஆராய்வதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதெனக் கூறினார். ஆனால், 1987இல் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் 3,695 அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் 257 பிரதேசசபைகளையும், 416 அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் 39 நகர சபைகளையும் 258 அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் 12 மாநகர சபைகளையும் ஐ.தே.க அரசாங்கம் பொதுமக்களின் எந்தவித கருத்துக்கணிப்புமின்றி ஒருதலைப்பட்சமாக ஏற்படுத்தியது.

## 3. கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாணம் வடக்கில் மகாஓயாவையும், கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலையும், தெற்கில் கும்புக்கன் ஓயாவையும், மேற்கில் மொனராகல, பதுளை, மாத்தளை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

இம்மாகாணம் தற்போது 3,839 சதுர மைல் நிலப்பரப்பையும், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாரை மாவட்டங்களையும் உள்ளடக்குகிறது. நாடு சுதந்திரமடைந்த காலகட்டத்தில் 1956 குடிசன மதிப்பு விபரங்களின்படி கிழக்கு மாகாணத்தில் ஜனத்தொகை பின்வருமாறு அமைந்திருந்தது.

| | **திருகோணமலை மாவட்டம்** | **மட்டக்களப்பு மாவட்டம்** | **கிழக்கு மாகாணம்** |
|---|---|---|---|
| தமிழர்கள் | 33,796 (46.47%) | 102,264 (51.15%) | 136,060 (49.90%) |
| முஸ்லிம்கள் | 23,219 (31.93%) | 85,805 (42.92%) | 109,024 (40.00%) |
| சிங்களவர் | 15,706 (21.60%) | 11,850 (5.93%) | 27,556 (10.10%) |

1981இல் குடிசன மதிப்பு இடம்பெற்றபோது மட்டக்களப்பு மாவட்டம், தற்போதைய மட்டக்களப்பு மற்றும் அம்பாரை மாவட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தது.

## உப அரசாங்க அதிபர்கள் பிரிவின்படி கிழக்கு மாகாணத்தில்

| இல | A.G.A பிரிவின் பெயர்கள் | மொத்த வாக்காளர் | மாகா% | மாவ% | சிங்கள வாக்காளர் | மாகா% | மாவ% |
|---|---|---|---|---|---|---|---|
| **அம்பாரை மாவட்டம்** | | | | | | | |
| 1. | படியத்தலாவ | 30,967 | 0.1 | 2.2 | 30,348 | 4.5 | 10.5 |
| 2. | மகாஓய | 19,061 | 1.1 | 2.6 | 18,756 | 2.8 | 6.4 |
| 3. | உஹன | 45,096 | 3.5 | 8.1 | 43,478 | 6.3 | 15.0 |
| 4. | சம்மாந்துறை | 38,732 | 5.7 | 13.4 | 1,356 | 0.2 | 0.5 |
| 5. | கல்முனை | 47,147 | 7.0 | 16.3 | 566 | 0.1 | 0.2 |
| 6. | நிந்தவூர் | 21,126 | 3.1 | 7.3 | 85 | 0.0 | 0.0 |
| 7. | அட்டாளைச்சேனை | 15,557 | 2.3 | 5.4 | 1,229 | 0.2 | 0.4 |
| 8. | அக்கரைப்பற்று | 27,024 | 4.0 | 9.3 | 1,594 | 0.2 | 0.6 |
| 9. | தமண | 17,353 | 2.6 | 6.0 | 16,850 | 2.5 | 5.8 |
| 10. | திருக்கோவில் | 11,529 | 1.7 | 4.0 | 138 | 0.0 | 0.1 |
| 11. | பொத்துவில் | 12,543 | 1.9 | 4.3 | 778 | 0.1 | 0.2 |
| 12. | லஹுகல | 3,537 | 0.5 | 1.2 | 3,148 | 0.5 | 1.1 |
| | மாவட்ட மொத்தம்: | 289,672 | 42.7 | 100 | 118,321 | 17.4 | 40.8 |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | | | | | | |
| 1. | கொரளைபற்று | 26,310 | 3.9 | 11.5 | 710 | 0.1 | 0.3 |
| 2. | கோ.பற்று தெற்கு | 7,207 | 1.1 | 3.1 | 721 | 0.1 | 0.3 |
| 3. | ஏறாவூர்பற்று | 47,151 | 7.0 | 20.6 | 2,829 | 0.5 | 1.3 |
| 4. | மன்முனை வடக்கு | 79,439 | 11.7 | 34.7 | 2,383 | 0.3 | 1.0 |
| 5. | மன்முனை மேற்கு | 16,494 | 1.6 | 4.6 | 210 | 0.0 | 0.1 |
| 6. | மன்முனை தெ.மேற்கு | 10,924 | 1.6 | 4.8 | 76 | 0.0 | 0.0 |
| 7. | ஏருவில் ம.மு.தெற்கு | 26,589 | 3.9 | 11.6 | 105 | 0.0 | 0.0 |
| 8. | பொரைத்தீவு | 20,907 | 3.1 | 9.1 | 690 | 0.1 | 0.4 |
| | மாவட்ட மொத்தம்: | 229,021 | 33.7 | 100 | 7,725 | 1.1 | 3.4 |
| **திருகோணமலை மாவட்டம்** | | | | | | | |
| 1. | பதவிசிரிபுர | 6,454 | 1.0 | 4.0 | 6,435 | 0.9 | 4.0 |
| 2. | குச்சவேளி | 13,210 | 2.0 | 8.3 | 1,995 | 0.3 | 1.2 |
| 3. | கொமரன்கடுவல | 3,692 | 0.5 | 2.3 | 3,651 | 0.5 | 2.4 |
| 4. | மொறவெவ | 5,102 | 0.8 | 3.9 | 2,847 | 0.4 | 1.8 |
| 5. | டவுண் + கிறவட் | 42,898 | 6.3 | 26.8 | 12,355 | 1.9 | 7.7 |
| 6. | தம்பலகாமம் | 12,412 | 1.8 | 7.8 | 3,935 | 0.6 | 2.5 |
| 7. | கின்னியா | 20,922 | 3.1 | 13.1 | 105 | 0.0 | 0.1 |
| 8. | மூதூர் | 23,297 | 3.4 | 14.6 | 559 | 0.1 | 0.3 |
| 9. | சேருவாவில | 8981 | 1.3 | 5.6 | 4,966 | 0.8 | 3.1 |
| 10. | கந்தளாய் | 23,125 | 3.4 | 14.4 | 18,893 | 2.9 | 11.7 |
| | மாவட்ட மொத்தம்: | 160,093 | 23.6 | 100 | 55,741 | 8.4 | 34.8 |
| | **மாகாண மொத்தம்** | 678,786 | 100% | | 181,787 | 26.8% | |

## 1991ஆம் ஆண்டு பதிவான வாக்காளர்கள்

| உ.அ பிரிவு% | தமிழ் வாக்காளர் | மாகா% | மாவ% | உ.அ பிரிவு% | முஸ்லிம் வாக்காளர் | மாகா% | மாவ% | உ.அ பிரிவு% |
|---|---|---|---|---|---|---|---|---|
| 98.0 | 372 | 0.1 | 0.5 | 1.2 | 247 | 0.0 | 0.1 | 0.8 |
| 98.4 | 229 | 0.0 | 0.1 | 1.2 | 19 | 0.0 | 0.0 | 0.1 |
| 96.4 | 1,263 | 0.2 | 0.4 | 2.8 | 180 | 0.0 | 0.1 | 0.4 |
| 8.5 | 10,651 | 1.5 | 3.8 | 27.5 | 26,609 | 3.9 | 9.2 | 68.7 |
| 1.2 | 13,437 | 2.0 | 4.6 | 28.5 | 32,814 | 4.8 | 11.3 | 69.6 |
| 0.4 | 5,789 | 0.8 | 3.0 | 27.4 | 15,211 | 2.2 | 5.3 | 72.0 |
| 7.9 | 887 | 0.1 | 0.3 | 5.7 | 13,410 | 2.0 | 4.6 | 86.2 |
| 5.9 | 8,675 | 1.3 | 3.0 | 32.1 | 16,647 | 2.5 | 5.8 | 61.6 |
| 97.1 | 416 | 0.1 | 0.1 | 2.4 | 87 | 0.0 | 0.0 | 0.5 |
| 1.2 | 11,321 | 1.7 | 3.9 | 98.2 | 58 | 0.0 | 0.0 | 0.5 |
| 6.2 | 3,261 | 0.5 | 1.1 | 26.0 | 8,467 | 1.2 | 2.8 | 67.5 |
| 89.0 | 347 | 0.1 | 0.1 | 9.8 | 39 | 0.0 | 0.1 | 1.1 |
| | 56,648 | 8.3 | 19.6 | | 113,788 | 16.8 | 39.3 | |
| 2.7 | 13,918 | 2.1 | 6.1 | 52.9 | 11,576 | 1.7 | 5.1 | 44.0 |
| 10.0 | 5,960 | 0.9 | 2.6 | 82.7 | 526 | 0.1 | 0.2 | 7.3 |
| 6.0 | 29,469 | 4.3 | 12.9 | 62.5 | 14,805 | 2.2 | 6.5 | 31.4 |
| 3.0 | 49,172 | 7.1 | 21.5 | 61.9 | 26,056 | 2.6 | 11.3 | 32.8 |
| 2.0 | 10,053 | 1.5 | 4.4 | 95.8 | 231 | 0.0 | 0.1 | 2.2 |
| 0.7 | 10,815 | 1.6 | 4.7 | 99.0 | 34 | 0.0 | 0.0 | 0.3 |
| 0.4 | 26,429 | 3.8 | 11.5 | 99.4 | 27 | 0.0 | 0.0 | 0.1 |
| 3.3 | 20,196 | 3.0 | 8.8 | 96.6 | 21 | 0.0 | 0.1 | 0.1 |
| | 166,012 | 24.3 | 72.5 | | 53,276 | 7.0 | 23.3 | |
| 99.7 | 129 | 0.0 | 0.0 | 0.2 | 000 | 0.0 | 0.0 | 0.0 |
| 15.1 | 5,812 | 1.0 | 3.6 | 44.0 | 5,390 | 0.8 | 3.3 | 40.8 |
| 98.9 | 33 | 0.0 | 0.0 | 0.9 | 7 | 0.0 | 0.0 | 0.2 |
| 55.8 | 1,589 | 0.2 | 1.0 | 35.3 | 444 | 0.1 | 0.3 | 8.7 |
| 28.8 | 25,138 | 3.8 | 15.8 | 58.6 | 4,204 | 0.6 | 2.6 | 9.8 |
| 31.7 | 3,699 | 0.5 | 2.3 | 29.8 | 4,779 | 0.7 | 3.0 | 38.5 |
| 0.5 | 1,548 | 0.2 | 1.0 | 7.4 | 19,248 | 2.8 | 12.0 | 92.0 |
| 2.4 | 11,602 | 1.7 | 7.2 | 49.8 | 11,136 | 1.6 | 7.0 | 47.8 |
| 55.3 | 3,440 | 0.5 | 2.1 | 38.3 | 566 | 0.1 | 0.4 | 6.3 |
| 81.7 | 1,249 | 0.2 | 0.2 | 5.4 | 2,891 | 0.4 | 1.8 | 12.5 |
| | 54,122 | 8.1 | 33.8 | | 48,605 | 6.9 | 30.4 | |
| | 276,782 | 40.8% | | | 215,669 | 31.8% | | |

1981இல் கிழக்கு மாகாணத்தின் ஜனத்தொகை விபரம் பின்வருமாறு:

| | திருமலை மாவட்டம் | மட்டக்களப்பு மாவட்டம் | அம்பாரை மாவட்டம் | கிழக்கு மாகாணம் |
|---|---|---|---|---|
| தமிழர்கள் | 93,510 (39.78%) | 238,216 (72.59%) | 79,725 (20.57%) | 411,451 (42.42%) |
| முஸ்லிம்கள் | 74,403 (29.26%) | 79,317 (24.17%) | 116,481 (41.66%) | 315,201 (32.49%) |
| சிங்களவர் | 89,341 (33.96%) | 10,646 (3.24%) | 146,371 (37.77%) | 243,358 (25.09%) |
| மொத்தம் | 245,250 | 328,170 | 387,577 | 970,010 |

மாவட்ட ரீதியாகவும், தேர்தல் தொகுதி ரீதியாகவும் 1993ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை.

**(1) தேர்தல் மாவட்ட இல. 13 திகமடுல்ல**

| தொகுதி | பா.உ | மொத்தம் | முஸ்லிம்கள்% | தொகை |
|---|---|---|---|---|
| A. அம்பாரை | 1 | 112,046 | 0.08 | 896 |
| B. சம்மாந்துறை | 1 | 51,991 | 74.8 | 38,889 |
| C. கல்முனை | 1 | 50,248 | 69.6 | 34,973 |
| D. பொத்துவில் | 2 | 97,721 | 50.6 | 49,447 |
| | 5 | 312,006 | 39.8 | 124,205 |

**(2) தேர்தல் மாவட்டம் இல. 12 மட்டக்களப்பு**

| தொகுதி | பா.உ | மொத்தம் | முஸ்லிம்கள்% | தொகை |
|---|---|---|---|---|
| A. கல்குடா | 1 | 73,640 | 29.3 | 21,577 |
| B. மட்டக்களப்பு | 2 | 123,893 | 34.2 | 42,371 |
| C. பட்டிருப்பு | 1 | 64,365 | 0.7 | 451 |
| | 4 | 261,898 | 24.6 | 64,399 |

**(3) தேர்தல் தொகுதி இல. 14 திருகோணமலை**

| தொகுதி | பா.உ | மொத்தம் | முஸ்லிம்கள் % | தொகை |
|---|---|---|---|---|
| A. சேருவாவில | 1 | 54,632 | 13.7 | 7,485 |
| B. திருமலை | 1 | 67,509 | 18.7 | 12,624 |
| C. மூதூர் | 1 | 61,949 | 66.1 | 40,948 |
| | 3 | 184,090 | 33.2 | 61,057 |

மேற்படி புள்ளிவிபரங்களிலிருந்து 1949க்கும் 1981க்குமிடையில் தமிழர் ஜனத்தொகை 136,059ல் இருந்து 411,451ஆக 302% அதிகரிப்பும், முஸ்லிம் ஜனத்தொகை 109,024ல் இருந்து 315,201 ஆக 289% அதிகரிப்பும், சிங்களவர் ஜனத்தொகை 27,556ல் இருந்து 243,358 ஆக 883% அதிகரிப்பும் ஏற்பட்டிருப்பதை அவதானிக்கலாம். குறிப்பிட்ட கால கட்டத்தில் நாடளாவிய ரீதியில் சிங்கள மக்களின் ஜனத்தொகை அதிகரிப்பு 238% மாத்திரமே.

சிங்களச் சனத்தொகையின் இப்பாரிய அதிகரிப்பு அரச உதவியோடு மேற்கொள்ளப்பட்ட பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழான கல்ஓயாத் திட்டம், பன்னல ஓயாத்திட்டம், அம்பலம் ஓயாத் திட்டம் போன்ற அம்பாரை மாவட்டத் திட்டங்களின் கீழும், கந்தளாய்த் திட்டம், அல்லைத் திட்டம், மொரவெவ முதலிக்குளத் திட்டம், பதவிய திட்டம் (பகுதி) மற்றும் மஹாதியுலுவெவ முதலிக்குளம் திட்டம் போன்ற திருகோணமலை மாவட்டத் திட்டங்களின் கீழும் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களின் விளைவாகும்.

## 4. சிங்கள ஆட்சியாளரினால் கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாண அரசியற் பிரதிநிதித்துவத்திற்கான பாராளுமன்றத் தொகுதி எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட போது இருந்த தமிழ் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களால் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நியாயப்படி சேரவேண்டிய பெரும்பகுதி காணி நிலம் சிங்களவர் தொகுதிகளாக மாற்றப்பட்டு அபகரிக்கப்பட்டதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 1016 சதுரமைல் நிலப்பரப்பில் 70 சதவீதமான 700 சதுரமைல் காணியை சேருவலைத் தொகுதியாகவும், அம்பாரை மாவட்டத்தில் உள்ள 1725 சதுர மைல் நிரப்பில் 50.7 சதவீதமான 900 சதுரமைல் காணியை அம்பாறைத் தொகுதியாகவும் சிங்களவர் அபகரித்துக் கொண்டனர்.

தமிழ் பேசும் மக்களான தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் பாரம்பரிய வசிப்பிடமும் சுதந்திரமான தொழில் துறைகளை உள்ளடக்கிய பிரதேசமுமான கிழக்கு மாகாணத்தில் இருந்து சிங்களவர் ஏறக்குறைய 1600 சதுரமைல், முழுமாகாணத்தின் மொத்த நிலப்பரப்பான 3837 சதுரமைல் நிலப்பரப்பில் ஏறக்குறைய 42 சதவீதமான பொன்விளையும் பூமியை அபகதித்துக் கொண்டதுமல்லாமல் எஞ்சிய பகுதியின் 400 சதுரமைல் காணிகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இந்த அநியாயத்தை தடுத்து நிறுத்த அன்றைய யு.என்.பீ, எஸ்.எல்.எப்.பீ கிழக்கு மாகாண தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளால் முடியவில்லை.

புதிதாகக் குடியேறிய சிங்களவரின் நலனுக்காகவே அம்பாறைத் தொகுதி ஏற்படுத்தப்பட்டது. புதிய நிருவாக மாவட்ட எல்லைகள் பிரிக்கப்பட்ட போது நியாயப்படி பிந்தனைப்பத்து

011901

மட்டக்களப்பு மாவட்டத்துடன் தான் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் முஸ்லிம் பெரும்பான்மையைத் திட்டமிட்டுச் சிதறடிக்கும் நோக்கத்தோடு அம்பாறை மாவட்டத்தோடு இணைக்கப்பட்டது. அப்படிப் பிரிக்கப்பட்டும் கூட அம்பாறை மாவட்டத்தில் 80 சதவீதத்துக்கும் கூடுதலான தமிழர்களும் முஸ்லிம்களும் கிழக்குக் கரையோரப் பகுதியில் தான் வாழ்ந்து வந்தனர். இவர்கள் நலனில் எதுவித அக்கறையும் இல்லாமல் குடியேற்றப் புதிய நகரமான அம்பாரையிலேயே மாவட்ட நிருவாகக் கச்சேரி அமைக்கப்பட்டது.

அம்பாரை மாவட்டத்திற்கு அன்று 3 யு.என்.பி. முஸ்லிம் பிரதிநிதிகளும், ஒரு தமிழ்ப் பிரதிநிதியும், ஒரு சிங்களப் பிரதிநிதியும் இருந்தனர். இதன்படி அரசியற் பிரதிநிதித்துவம் அம்பாறை மாவட்டத்தில் 80 சதவீதம் தமிழ் பேசும் மக்களாகிய முஸ்லிம்களுக்கும் தமிழருக்கும் இருந்தது. ஆனால் 20 சதவீகித பிரதிநிதித்துவத்தைக் கொண்டு சிங்களவர் நீதி நியாயத்திற்கெல்லாம் முற்றும் முரணாக முஸ்லிம் தமிழ்ப் பெரும்பான்மையினரின் உரிமைகளைச் சூறையாடினர். 80 சதவிகித பிரதிநிதித்துவத்தைக் கொண்டு சட்டபடி அமுலாக்க வேண்டியதைக்கூட அன்றைய ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முஸ்லிம் தமிழ் பிரதிநிதிகளால் முடியவில்லை.

ஐ.தே.கட்சியின் தார்மீக ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாணத்திற்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில் ஐந்து பேர் (5) தமிழர். இன்னும் ஐந்து போர் (5) முஸ்லிம்கள், இருவர் மட்டுமே சிங்களவர். விகிதாசார அடிப்படையில் தமிழ் பேசும் மக்களாகிய தமிழர் முஸ்லிம்கள் 83.3 சதவிகிதம், சிங்களவர் 16.7 சதவிகிதம். தமிழ் பிரதிநிதிகள் இருவர் கபினட் மந்திரிகள், ஒருவர் மாவட்ட மந்திரி. முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவர் பிரதி அமைச்சர், இன்னும் இருவர் மாவட்ட மந்திரிகள். சிங்களவர் பிரதிநிதிகளில் அம்பாரைத் தொகுதிப் பிரதிநிதி அந்த மாவட்ட மந்திரியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியால் கொடுக்கப்பட்டிருந்த நியமனங்களை வெளிப்படையாகப் பார்க்கும்போது இனரீதியாக அரசியல் அதிகாரங்கள் கிழக்கு மாகாணத் தமிழருக்கும், முஸ்லிம்களுக்குமே கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த தமிழ், முஸ்லிம் கபினட் அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் மாவட்ட மந்திரி ஆகியோரால் கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை ஓரளவுக்கேனும் பாதுகாக்க முடியவில்லை.

தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளை உள்ளடக்கிய ஒரு நிருவாக மாவட்டம் ஏற்படுத்தக் கிழக்கிலங்கை ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் எடுத்த முயற்சி அம்பாரைத் தொகுதியின் ஐக்கிய தேசியச் சிங்களப் பிரதிநிதி தயாரத்தினவின் ஆட்சேபனையின் பேரில் நிராகரிக்கப்பட்ட மானக்கேடான அனுபவம் கிழக்கு மாகாண 17 சதவிகித சிங்களப் பிரதிநிதித்துவத்திற்கும் 83 சதவிகித தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தார்மீக ஆட்சியில் எவ்வளவு மதிப்புக் கொடுக்கப்பட்டது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண எல்லைக்குள் வரும் காணியின் விஸ்தீரணம் ஏறக்குறைய 1,60,000 ஏக்கர், அதாவது 45,000 காணித்துண்டுகள். இக்காணியில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு ஓதுக்கப்பட்டுள்ள 26,000 காணித் துண்டுகளைவிட மேலதிகமான 19,000 காணித்துண்டுகளில் ஏறக்குறைய 100,000 சிங்களவர்கள் புதிதாகக் குடியேறுவார்கள். தமிழருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன 18,500 காணித்துண்டுகளில் ஏறக்குறைய 30,000 இந்திய வம்சாவழித் தமிழர்களும் 50,000 வெளிமாகாண இலங்கைத் தமிழர்களும் குடியேறுவர். முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 7,600 காணித்துண்டுகளில் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட 38,000 கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மட்டுமே குடியேறுவது சாத்தியம்.

பொத்துவில் பகுதியில் விரைவில் நடைமுறைக்கு வரவிருக்கும் ஹெட ஓயா போன்ற திட்டமும் செயற்படத் தொடங்கியதும், கல்ஓயா, கந்தளாய் அபிவிருத்தித் திட்டங்களால் ஏற்பட்ட மாற்றங்கள் போல் கிழக்கு மாகாணச் சனத்தொகையில் கணிசமான மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. கிழக்கு மாகாணத்தின் இன விகிதாசாரம் விரைவில் ஏறக்குறைய சிங்களவர் 55 சதவிகிதம் தமிழர் 30 சதவிகிதம், முஸ்லிம்கள் 15 சதவிகிதம் என்ற நிலையில் மாற்றம் ஏற்படும். இப்படியான நிலையில் கிழக்கு மாகாணத்துக்கு ஒரு தனிமாகாண சபை அமைத்துத் தேர்தல் நடைபெறும் போது முடிவு இப்போதைக்கு இருப்பதைவிட முற்றும் மாறுபட்டதாகவே அமையும். ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க, தமிழ், முஸ்லிம் அரசியற் கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் எல்லாம் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புண்டு. மற்ற இனத்தவர்களை விட முஸ்லிம்களே வழக்கம்போல் எல்லாக் கட்சிகளிலும் போட்டியிடுவார்கள். 15 சதவிகித வாக்குகள் சில்லாங் கொட்டை சிதறுவது போல் சிதறி விரைவில் முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் அரசியல் பலம் அற்றவர்களாகப் போவது தவிர்க்க முடியாததாகிவிடும். ஆகவே கிழக்கு மாகாணத்திற்கு ஒரு தனிமாகாண சபை ஏற்பட்டு முஸ்லிம்களின் 1981ஆம் ஆண்டின் 33 சதவிகிதாசாரத்தையோ அல்லது ஒன்றிணைந்த அரசியற் பலத்தையோ சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு உபயோகித்து முஸ்லிம்கள் சுதந்திரமாகப் பாதுகாப்போடு வாழமுடியும் என்பது எதிர்காலத்தில் நடைமுறைக்குச் சாத்தியமற்ற வெறும் கற்பனை.

## 5. உள்ளூர் நிருவாகப் பிரிவுகளில் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் புறக்கணிப்பு

கிழக்கு மாகாணத்தில் 1921 ஆம் ஆண்டு சிங்களவரின் சனத்தொகை நான்கு சதவிகிதம் மட்டுமே. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தாலும் பேரினவாத ஆட்சியாளரின் அனுசரணையோடு கள்ளத்தனமாகக் குடியேறியவர்களின் எண்ணிக்கையோடும் கூட்டு மொத்தமாக 1981ஆம் ஆண்டுக் கணக்குப்படி கிழக்கு மாகாணத்தில் சிங்களவரின் குடிசன விகிதாசாரம் 24 ஆக அதிகரித்துள்ளது. பாரம்பரிய முஸ்லிம், தமிழ் பகுதிகளில் முதலில் சிங்களவரைக் குடியேற்றிவிட்டு அதன் பின்னர் தமக்குள்ள ஆட்சி அதிகாரத்தை உபயோகித்து அப்பகுதிகளைச் சிங்கள உப அரசாங்க அதிபர் பிரிவுகளாகவும் கிராமசேனையாளர் பிரிவுகளாகவும் எல்லையிட்டு இறுதியில் அரச திணைக்களங்கள் மூலம் வரைபடங்களைத் தயாரித்துச் சிங்கள ஆட்சியாளர்கள் எல்லோரையும் ஏமாற்றுகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 1971 ஆம் ஆண்டுக் கணக்குப்படி தமிழர் 39%, முஸ்லிம்கள் 33%, சிங்களவர் 28% ஆனால் 1976ஆம் ஆண்டுத் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு இங்கு புதிதாகக் குடியேறிய சிங்களவருக்காக 700 சதுர மைலுக்கும் கூடுதலான நிலப்பரப்பை உள்ளடக்கிய சேருவல என்னும் தேர்தற் தொகுதியை ஏற்படுத்தியது. 1048 சதுரமைல் பரப்புள்ள திருகோணமலை மாவட்டத்தில் 24% சிங்களவர் 70% காணியை ஆக்கிரமித்துக்கொண்டனர். 76% தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் மிஞ்சியது ஆக 348 சதுரமைல் காணிமட்டுமே. அம்பாறை மாவட்டத்தில் 1971ஆம் ஆண்டுக் கணக்குப்படி முஸ்லிம்கள் 47% சிங்களவர் 30% தமிழர் 23%. கல்லோயாத் திட்டத்தின்கீழ் புதிதாகக் குடியேறிய சிங்களவருக்கு 1976 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அம்பாரைத் தொகுதியின் விஸ்தீரணம் ஏறக்குறைய 880 சதுரமைல். அம்பாரை மாவட்டத்தின் மொத்தப்பரப்பு

1,775 சதுரமைல். இங்கு சிங்களவர் அதிகப்படியாக வரக்கூடிய வகையில் ஏற்படுத்தப்பட்ட லஹுகலை, தமணை A.G.A. பிரிவுகள் - விஸ்தீரணம் 370 - கூட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டால் 1981ஆம் ஆண்டுக் கணக்குப்படி 36% சிங்களவர் - ஏறக்குறைய 1250 சதுரமைல் - 70% காணியைப் பெறக்கூடியதாக எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. பேரினவாதிகள் இலங்கையில் சிறுபான்மையினரின் உரிமைகளைச் சூறையாடியுள்ளனர் என்பதற்கு இது ஒரு தகுந்த எடுத்துக்காட்டு.

பழைய D.R.O பிரிவு முறைப்படி இன்றைய அம்பாறை மாவட்டமும் மட்டக்களப்பு மாவட்டமும் ஒன்றிணைந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையான பாணமைப்பத்து, அக்கரைப்பத்து, சம்மாந்துறைப்பத்து, கரவாகு - நித்தவூர்பத்து என்னும் நான்கு பிரிவுகளும், தமிழர்கள் அதிகப்படியான கோறாலைப்பத்து, ஏறாவூர்பத்து, மண்முனை மேற்குப்பத்து, மண்முனை எருவில் போரதீவுப்பத்து என்னும் நான்கு பிரிவுகளும், சிங்களவர் அதிகப்படியான பிந்தனைப்பத்து, வெவகம்பத்து எனும் இரு பிரிவுகளும் இருந்தன.

திருகோணமலை மாவட்டத்தில் கட்டுக்குளம்பத்து கிழக்கு, நகரமும் கிறவட்டும், என்னும் இரு பிரிவுகளில் தமிழர்கள் அதிகப்படியாகவும், கிண்ணியாப் பிரிவு, கொட்டியார்பத்து என்னும் இரு பிரிவுகளில் முஸ்லிம்கள் அதிகப்படியாகவும் கந்தளாய்ப்பிரிவு, கட்டுக்குளம் பத்து மேற்கு என்னும் இருபிரிவுகளில் சிங்களவர் அதிகப்படியாகவும் இருந்தனர்.

சுதந்திரத்திற்குப் பின் D.R.O. பிரிவுகள், உப அரசாங்க அதிபர்கள் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டபோது முஸ்லிம் பிரிவுகள் பெரும்பாலும் முஸ்லிம்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டன. பெரும்பகுதி அரசாங்கப் பூமியும், நீர்நிலைகளும் சிங்கள, தமிழ் பெரும்பான்மை நிருவாகப் பிரிவுகளுக் குள்ளாக்கப்பட்டு முஸ்லிம்கள் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

முன்பிருந்த முஸ்லிம் பெரும்பான்மையான பாணமைப்பத்து D.R.O. பிரிவு - 472 சதுரமைல் - சிங்களவர் அதிகப்படியான லஹுகலை A.G.A. பிரிவாகவும், முஸ்லிம் அதிகப்படியான பொத்துவில் A.G.A. பிரிவாகவும், பிரிக்கப்பட்டுள்ளது. 19,831 சனத்தொகையைக் கொண்ட முஸ்லிம் A.G.A பிரிவுக்கு 103.9 சதுரமைல் நிலப்பரப்பும், 7085 சனத்தொகையைக் கொண்ட சிங்கள A.G.A பிரிவுக்கு 368.2 சதுரமைல் நிலப்பரப்பும் என்ற ரீதியில் பிரிக்கப்பட்டுள்ளது. முன்பிருந்த சம்மாந்துறை D.R.O. பிரிவு இன்றுள்ள ஹாடி கல்வி நிலையத்துக்கும் அப்பால் இருந்து அம்பாரைக் குளத்தையும், அம்பாரை நகரத்தையும் உள்ளடக்கிய ஒரு பெரும் நிலப்பரப்பு. இதிலிருந்து ஏறக்குறைய 50 சதுரமைல் காணி அபகரிக்கப்பட்டு வேவகம்பத்து வடக்கு - உகனை சிங்கள A.G.A பிரிவுடன் சேர்க்கப்பட்டுள்ளது. சிங்களவேவகம்பத்து சனத்தொகை 65,815, விஸ்தீரணம் 259.9 சதுரமைல், சம்மாந்துறை முஸ்லிம் A.G.A பிரிவு சனத்தொகை 40,704 பரப்பு ஆக 99.1 சதுரமைல் மட்டுமே.

முஸ்லிம்களைப் போலவே, கிழக்கு மாகாணத்தில் தமிழரும், சிங்களவரும் கரையோரப் பகுதிகளிலும் பிரதான பாதை ஓரங்களிலும் உள்ள மேட்டு நிலப்பகுதிகளில்தான் கூட்டம் கூட்டமாகக் குடியிருக்கின்றனர். தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் எல்லோரினதும் விவசாயக் காணிகளும் கால்நடை மேய்ச்சல் தரைகளும் மீன்பிடித்தொழில் நீர்நிலைகளும் வசிப்பிடங்களைவிட்டும் பிரிந்து வெவ்வேறு இடங்களில்தான் அமைந்துள்ளன. இதனால்தான் தற்போதுள்ள A.G.A பிரிவுகள் அவ்வப் பிரிவுகளில் உள்ள சனத்தொகைக்கு ஏற்றவாறு அமையவில்லை. <u>லஹுகலை A.G.A பிரிவில் உள்ள காணியையும் கல்முனை A.G.A பிரிவில் உள்ள காணியையும் சனத்தொகை ரீதியாக ஒப்பிடும்போது சிங்களவர் முஸ்லிமைவிட 208 மடங்கு கூடுதலான காணியைப் பெற்றுள்ளார்கள். அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம் A.G.A பிரிவுகளுக்கான சனத்தொகையோடு இங்குள்ள காணிகளையும் சிங்கள A.G.A பிரிவுக்கான சனத்தொகையோடு அங்குள்ள</u>

காணிகளோடும் ஒப்பிடுகையில் சிங்களவர் 13 மடங்கு கூடுதலான காணியைப் பெற்றுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டுக்கணக்குப்படி ஏறக்குறைய 28,000 முஸ்லிம்கள் காத்தான்குடியிலும், 20,000க்கும் கூடுதலான முஸ்லிம்கள் ஏறாவூரிலும் கிட்டத்தட்ட 27,000 முஸ்லிம்கள் வாழைச்சேனை, ஓட்டமாவடியிலும் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் விவசாயிகள். இவர்களுடைய விவசாயக்காணிகள் கால்நடைகளின் மேச்சல் நிலங்கள் மீன்பிடி நீர்நிலைகள் யாவும் இம்மாவட்டத்தில்தான் உண்டு. ஆனால் இற்றைவரை மற்ற இன மக்களுக்கு இருப்பது போன்று முஸ்லிம்களின் வசிப்பிடங்களையும் தொழிற்துறை நிலங்களையும், உள்ளடக்கிய A.G.A பிரிவு எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் அம்பாரை மாவட்டத்தில் அக்கரைப்பற்று முஸ்லிம் D.R.O பிரிவில் உள்ள திருக்கோயிலில் 15,000 தமிழருக்கும், அக்கரைப்பற்றில் உள்ள 13,000 தமிழருக்கும், பாணமைப்பற்று D.R.O. பிரிவில் லஹு்கலையில் உள்ள 6500 சிங்களவருக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறாலைப்பற்றில் உள்ள 11,000 தமிழருக்கும், திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியார்பத்து (சேருவாவில)யில் உள்ள 12,000 சிங்களவருக்கும், மொறவெவாவில் உள்ள 5,000 சிங்களவருக்கும் கோமரனகடுவலவில் உள்ள 2,000 சிங்களவருக்கும் தனித்தனி A.G.A பிரிவுகளும் கிராமசேவையாளர்ப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

A.G.A கிராம சேவையாளர்கள் பிரிவுகளுக்கான நிலப்பரப்பும், எல்லைகளும், நிர்ணயிக்கப்பட்டபோது முஸ்லிம்கள் நலன்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளன. அதிகாரப் பகிர்வுக்கான இனரீதி A.G.A பிரதேச சபைகள் ஏற்படுத்தும்போது அவ்வப்பிரிவுகளில் உள்ள சனத்தொகைக்கேற்ப நிலப்பரப்பும் ஒதுக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

இனப்பிரச்சினை சம்பந்தமாகத் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது பதினெட்டு சதவிகித (18%) தமிழ் மக்கள் இலங்கையின் முப்பது சதவிகித (30%) நிலப்பரப்பைக் கொண்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தமிழ் தாயகமாகக் கோருவது நீதிநியாயத்திற்கு முரணானதென்று சிங்களப் பிரதிநிதிகள் வலியுறுத்தி தமிழர் கோரிக்கையை நிராகரித்தனர். இந்த நீதிநியாய அடிப்படையில் அம்பாரை மாவட்ட 36% சிங்களவர் இங்குள்ள 66% காணிகளையும் திருகோணமலை மாவட்டத்தில் 34% சிங்களவர் இங்குள்ள 70% காணிகளையும் அபகரித்துக்கொள்வதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இவ்வாறே 72% தமிழர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சகல காணிகளுக்கும் உரிமை கோருவது எந்த வகையிலும் நியாயமாகாது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 3,839 சதுரமைல் நிலப்பரப்பை 1981ஆம் ஆண்டுக் குடிசன விகிதாசாரப்படி தமிழருக்கு 42% - 1612 சதுரமைல், முஸ்லிம்களுக்கு 33% - 1267 சதுரமைல் சிங்களவருக்கு 25% - 960 சதுரமைல் என்ற ரீதியில் பகிர்ந்து கொள்வதே நிரந்தர சமாதானத்துக்கு நியாயமான தீர்வாக அமையும்.

முஸ்லிம்களுக்கு கிழக்கிலங்கையில் வேண்டியதெல்லாம் பாதுகாப்புள்ள வசிப்பிடம், சுதந்திரமான தொழிற்துறைகளுக்கு நியாயப்படி உரித்துள்ள காணி, அரசியல் சுயநிர்ணய உரிமைகளுக்குப் பாதுகாப்பு, தாய் மொழியில் நிர்வாகம், மார்க்க கலாசார நடவடிக்கைகளுக்குச் சுதந்திரம், அரசியல் அதிகாரப் பகிர்வில் சிங்களவர், தமிழர் போன்று முஸ்லிம்களும் பங்கு கொண்டு ஆட்சி அதிகாரத்தைச் சகல மட்டத்திலும் அனுபவிக்கக்கூடிய நிரந்தர வாய்ப்பு.

இலங்கை ஒற்றையாட்சியின் கீழ் சிங்களவர் தமிழர் முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழவேண்டுமானால், நீதி, நியாயம்,

சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும். ஒரு இனம் மற்ற இனத்தை அடக்கி ஒடுக்க முற்படக்கூடாது. வெறும் நிருவாகப் பிரிவுகளாக இற்றைவரை இருந்து வந்த மாகாணம், மாவட்டம், உப அரசாங்க அதிபர் பிரிவு கிராமசேவையாளர் பிரிவுகள் அனைத்தும் (இனரீதியில் பகிர்ந்தளிக்கப்படும்) ஆட்சி அதிகாரப் பிரிவுகளாகவும், பிரதேச நாடாளுமன்றப் பிரிவுகளாகவும் விரைவில் மாறப்போகின்றன. ஆகவே, அதிகாரப் பகிர்வுக்கான பிரிவுகள் இன உரிமைகளையும், தனித்துவத்தையும் பேணிப் பாதுகாக்கக்கூடியனவாக அமைய வேண்டியது இன்றியமையாத தேவையாகும்.

## 6. கிழக்கிலங்கை முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக ஒன்றிணைய வேண்டும்

சிங்களப் பேரின ஆட்சியாளர்களும், அவர்களின் அடிவருடிகளும் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் இன உரிமைகளைத் திட்டமிட்டு நிராகரித்து, எமது விருப்பத்துக்கு மாறாக ஒன்றிணைந்த மாநில சபைக்குள் எம்மை ஒதுக்கித் தள்ளிவிட்டு 'ஒன்றிணைப்புக்கு முஸ்லிம்கள் ஆதரவா?' என்று கேட்கின்றனர். எமக்கு விருப்பம் இல்லாவிட்டால் ஒன்றிணைப்பை உடைத்துவிடச் சர்வஜன வாக்கெடுப்பு வரும்போது வாக்குப் போடுங்கள் எனக்கூறுகின்றனர். சர்வஜன வாக்கெடுப்பு எப்போது வரும் என்று அவர்களால் நிச்சயமாகக் கூற முடியாது. தொடர்ந்து ஒத்திப் போடப்பட்டு வரலாம், நடைபெறாமல் போகலாம். அல்லது நடைபெற்று இணைப்பு உறுதியாக நிலைபெறச் சாதகமாகவும் வாக்குக் கொடுபடலாம். இவ்வாறான நிலையில் ஒன்றிணைந்த மாகாண சபையில் முஸ்லிம்களின் நிலை என்ன? முஸ்லிம்களின் உயிர் உடமைகளுக்கு என்ன உத்தரவாதம்?

நாமும் ஆட்சி அதிகாரத்தில் சமபங்கு கொள்வதற்காக முஸ்லிம்கள் அதிகப்படியாக உள்ள ஒரு மாகாண சபை

ஏற்படுத்தப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். ஒன்றிணைக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கு மாகாண சபையை உடைக்க இங்குள்ள முஸ்லிம்கள் சம்மத வாக்குக் கொடுப்பதால் எமது கோரிக்கைப்படி முஸ்லிம்கள் அதிகப்படியான மாகாணசபையை ஏற்படுத்தச் சிங்கள அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறதா? இல்லவே இல்லை.

ஆனால் உண்மை என்னவெனில் தமிழர் நடாத்திய உரிமைப் போராட்டத்தின் பயனாகப் பெற்றெடுத்த ஒன்றிணைந்த மாநிலத்தை இரண்டு துண்டாக உடைத்துவிட முஸ்லிம்களைப் பாவித்து, வடகிழக்கில் வாழும் தமிழருக்கும் முஸ்லிம்களுக் குமிடையில் நிரந்தரமான பகைமையை ஏற்படுத்துவதே சிங்கள அரசாங்கத்தின் வஞ்சகத் திட்டம். இத்திட்டம் வெற்றி பெற்றவுடன் முஸ்லிம்களின் வரலாற்று வசிப்பிடங்களுக்கூடாக உடனடியாகச் சிங்களவரைக் குடியேற்றிக் கிழக்கு மாகாணத்தை முற்றாக அபகரித்துக்கொள்வதே பேரின ஆட்சியாளரின் அடுத்த நடவடிக்கை. இப்போதுள்ளவாறு கிழக்கு மாகாணம் தொடர்ந்து தனித்து நிற்குமாயின் சிங்கள ஆட்சியாளர் செய்து வந்த அடாவடித்தனமான செய்கைகளைத் தடுத்து நிறுத்த முஸ்லிம் பிரதிநிதிகளால் முடியவே முடியாது. அடிமட்டத்தில், பிரதேசசபைகள் அமைத்தபோதுகூட இவர்களால் முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றெடுக்க முடியவில்லை. முஸ்லிம் எம்.பி.களின் அரசியல் சாணக்கித்திற்கும் சாதனைக்கும் தகுந்த உரைகல் அம்பாரை மாவட்ட முஸ்லிம்களின் இன்றைய அவலநிலை. தங்கள் 'பம்பரம் இதற்கு மேல் ஆடாது' என்று அவர்களே பகிரங்கமாகக் கூறியதன் பின்னரும் இவர்களிடம் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பை முற்றாகவிட்டு வைப்பது மிகமிக ஆபத்தானதாகும். முஸ்லிம்களின் தனித்துவம், இன உரிமைகள், வரலாற்று வசிப்பிடம், அரசியல் பிரதிநிதித்துவம், மதம், கல்வி, கலாசாரம், பொருளாதாரம் போன்றவற்றிற்கு உடனடியாகப் பாதுகாப்பு அவசியமாக விருப்பதால், கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அனைவருக்கும், அரசியல் ரீதியாக

ஒன்றிணைந்து ஆக்கபூர்வமான திட்டத்தோடு செயலாற்ற முன்வர வேண்டும்.

## 7. நீதியான தீர்ப்புக்குத் தேவையான அணுகுமுறைகள்

'அந்நிய ஆட்சியின் கீழ் பெரிதும் புறக்கணிக்கப்பட்ட இனத்தவர் சிங்களவர். இலங்கையின் சுதந்திரத்திற்குப் போராடியவர்களும் சிங்களவர்கள்தான். அந்நியர் ஆட்சிக்காலத்தில் தமிழர்கள் தங்கள் இன விகிதாசாரத்தைவிடப் பன்மடங்கு கூடுதலான சலுகைகளைப் பெற்றிருந்தனர்' இப்படிக் கூறித் திட்டமிட்டு தமிழரின் நியாயமான இன உரிமைகளைப் பெரும்பான்மைச் சிங்கள ஆட்சியாளர், சுதந்திரத்தின் பின் புறக்கணித்தனர். இதனை ஏற்காத தமிழர் சத்தியாக்கிரகம், சமஷ்டி ஆட்சி, தனிநாட்டுப் பிரிவினை என்றவாறு 40 வருடமாக உரிமைப் போராட்டம் நடத்துகின்றனர்.

சிங்களவர் கூறியதுபோல் இன்று தமிழர்கள் 'முஸ்லிம்கள் சிங்களவர் ஆட்சியில் பல சலுகைகளைப் பெற்றவர்கள், வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த மாநில அமைப்பு தமிழர்களின் போராட்டத்தாலும், தியாகங்களாலும் கிடைத்தது' என்று கூறி, முஸ்லிம்களின் இன உரிமைகளை நிராகரித்தால் அல்லது மறுத்தால் தமிழர் தமது இன உரிமைகளைப் பெற என்னென்ன செய்தார்களோ முஸ்லிம்களும் அத்தனையும், அதைவிடக் கூடுதலாகவும் எதிர்காலத்தில் செய்யப்போவது நிச்சயம்.

இலங்கைக்குச் சுதந்திரங் கிடைத்தபோது, பிரித்தானிய ஆட்சியாளர் சுதந்திர இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை அன்று சிங்களவர் 70% பெரும்பான்மையாகவிருந்த அரசாங்கத்திடமே ஒப்படைத்தனர். அதன் பின்னர் ஏற்பட்ட அநீதியையும், அட்டூழியங்களையும் கடந்த 40 வருடங்களாக அனுபவித்த சிறுபான்மை இனத்தவராகிய தமிழரும் முஸ்லிம்களும் நன்கு அறிவர். சிறுபான்மை இனத்தவரின் மொழி, பாரம்பரிய வசிப்பிடம்,

நிலபுலன், அரசியற் பிரதிநிதித்துவம், பாதுகாப்பு என்பவற்றிற்கு தொடர்நது வந்த 70% சிங்களவர் பெரும்பான்மை ஆட்சிகளில் எந்தவித விமோசனமும் ஏற்படவில்லை.

இலங்கை-இந்திய, ஒப்பந்தப்படி கிழக்கு மாகாண முஸ்லிம் இனத்தவரின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு, தமிழர் 70% பெரும்பான்மையாக வரக்கூடிய வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த மாநில மாகாணசபைக்கு ஆட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்படும்போது சுதந்திர இலங்கையில் 40 ஆண்டு காலமாக 18% தமிழருக்கு ஏற்பட்ட கதிதான் தமிழ் பேசும் மாநிலத்தில் உள்ள 18% முஸ்லிம்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஏறக்குறைய ஐந்து இலட்சம் முஸ்லிம்களின் பீதியைத் தணிப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் ஒன்றிணைப்பு நிரந்தரமாவதும், சமாதான சகவாழ்வு உறுதியாவதும் ஒருக்காலும் சாத்தியமாகாது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வசிப்பிடம் என்று பிரதானமாகக் கூறப்பட்டிருப்பதாலும், சிங்களவர்களுக்கு இலங்கையில் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு வேறு ஏழு (7) மாகாண சபைகளும், சிங்களவரே 74% அதிகப்படியான மத்திய அரசாங்கமும் இருப்பதாலும் வடக்குக் கிழக்கு ஒன்றிணைந்த மாநிலத்தல் முஸ்லிம்கள் கோருவது போன்ற உரிமைப் பங்கினை இங்குள்ள சிங்களவர் கோர முடியாது. கோருவதும் நியாயமல்ல. அப்படியில்லாமல் 'முஸ்லிம்கள் கோருபவைகளைக் கொடுத்தால், முஸ்லிம்கள் கோரிக்கை போன்ற சிங்களவர் கோரிக்கைகளையும் கொடுக்க வேண்டிவரும். ஆகவே முஸ்லிம்களின் கோரிக்கைகளை நிறைவேற்றமுடியாது' என்று 70% தமிழர்கள் கூறுவார்களேயானால், அது வடக்கு கிழக்கு இணைப்பை விரும்பாத 74% சிங்கள

ஆட்சியாளர்கள் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் ஒன்றிணைப்புக்கு எதிர்ப்பு எனக்கூறித் தமிழர் கோரிக்கையை நிராகரிக்க முற்படும் கதையைத்தான் ஒத்திருக்கும். இக்கதையைத் தமிழர் எப்படி ஏற்க மறுத்தனரோ அவ்வாறே முஸ்லிம்களும் தமிழர் கூறுவதை ஏற்க மறுப்பார்கள். சிங்களவர் செய்த தவறைத் தமிழர்களும் செய்யக்கூடாது.

தமிழர் கோரிக்கையை நிறைவேற்ற விஷேட ஏற்பாடுகளை அரசியல் சாசனத்திலும், மாகாணசபை மசோதாவிலும் பாராளுமன்றம் நிறைவேற்றியது போன்று, முஸ்லிம்களின் இன உரிமை, ஆட்சி அதிகாரப் பகிர்வுக்கான விஷேட ஏற்பாடுகளும் அரசியல் சாசனத்திலும், மாகாணசபை மசோதாவிலும் பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்படவேண்டும்.

011901

இனப்பிரச்சினை சம்பந்தமாகத் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது பதினெட்டு சதவிகித (18%) தமிழர் இலங்கையின் முப்பது சதவிகித (30%) நிலப்பரப்பைக் கொண்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தமிழர் தாயகமாக கோருவது நீதி நியாயத்திற்கு முரணானதென்று கூறிச் சிங்களப் பிரதிநிதிகள் தமிழர் கோரிக்கையை நிராகரித்தனர். இந்த நீதிநியாய அடிப்படையில் அம்பாரை மாவட்ட 36% சிங்களவர் இங்குள்ள 66% காணியையும், திருகோணமலை மாவட்டத்தில் 34% சிங்களவர் இங்குள்ள 70% காணிகளையும் ஆக்கிரமித்துள்ளதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். இவ்வாறே 72% தமிழர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சகல காணிகளுக்கும் உரிமை கோருவது எந்த வகையிலும் நியாயமாகாது.

எம்.ஐ.எம்.முஹியத்தீன்

**National Digitization Project**

***National Science Foundation***

Institute : South Eastern University of Sri Lanka

1. Place of Scanning : Main Library, South Eastern University of Sri Lanka, Oluvil

2. Date Scanned : 2018.02.15

3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd, No 435/16, Kottawa Rd, Hokandara North, Arangala, Hokandara

4. Scanning Officer

Name : I.W.A.C.J. Chandrasena

Signature : Charith

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Acting Librarian

Name : M. M. Mashroofa

Signature : [signature]

Date : 2018.02.15

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*